**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**

**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆவணி மாதம் 12ம் நாள்

**இ.ம.எண். 3/2025**

**இல்**

**அசல் வழக்கு எண். 43/2022**

தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூர் மெயின்ரோட்டில் வசித்து வரும் சுந்தர்ராஜன் மனைவி 61 வயதுள்ள மணிமொழி.

..மனுதாரர்/ பிரதிவாதி

//எதிர்//

தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூர் மெயின்ரோட்டில் வசித்து வரும் பாபு மனைவி 50 வயதுள்ள சசிகலா.

..எதிர்மனுதாரர்/ வாதி

மனுதாரரால் இம்மனுவானது கடந்த 06.07.2023 அன்று மனுதாரர் பேரில் ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை மாற்றியமைத்து வழக்கை மேல் நடத்த உத்தரவு பிறப்பிக்க கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு நீதிமன்ற கட்டணமாக ரூ.20 செலுத்தப்பட்டுள்ளது.

மனு 12.06.2025 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 12.06.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என் முன்பாக இன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. அமிர்தராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று 28.08.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவாணை**

முடிவாக, மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ. 1,000/– கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு, 2025ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2025.08.28 17:07:51 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**